பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 12 சனிக்கிழமை (28-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 229

## மணலாற்றில் புலிகள் தாக்குதல் 4படையினர்பலி ஆயுதங்கள்மீட்பு!

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை 2.30மணியளவில் மணலாறுஇராணுவத்தளம் மீதுதாக்குதல நடத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அதிரடித்தாக்குதலினால் மணலாறுமுகாமின் பாதுகாப்பு முகாங்களான மண்கிண்டி முகாமுக்கும் பத்தரவெளி முகாமுக்கும் இடையேஅமைக்கப்பட்டிருந்த பத்துக்காவலரண்களை தாக்கிஅழிக்கப்பட்டுள்ளதுடன் நான்குஇராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

அதிகாலைப் பொழுதில் விடுதலைப்புலிகளின் இத்தாக்குதலினால் படையினருக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தூதரகம்மீது லண்டனில் குண்டுத்தாக்குதல்

லண்டனில் உள்ளஇலங்கை தூதரகம மீது, கடந்த புதன் கிழமை அதிகாலை, இனந்தெரியாதோரால் பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

இத் தாக்குதலினால் தூதரகக்கட்டிடத்துக்கு சிறுசேதம் ஏற்பட்டுள்ளது. இத் தாக்குதலில் ஈடுபட்ட இருநபர்களதும் உருவங்கள் தூதரகக் கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த வீடியோக் கமராவில் பதிவாகியுள்ளது.

தாக்குதல் சம்பவத்தையடுத்து தூதரகப்பாதுகாப்பை லண்டன பொலிஸார் அதிகரித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்த புலன் விசாரணைகளை ஸ்கொட்லண்ட்யாட் புலனாய்வுப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (இ)

## தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேர்வது அவசியம்

# யுத்தத்திற்கு முடிவுகட்டுவதாயின் அரசு-புலிகளுடன் பேசவேண்டும்!

## கறுப்பு ஜூலை நினைவு தினத்தில் மாவை

(வவுனியாநிருபர் ரி விவேகராசா)

**அறுபதாயிரம் தமிழ்மக்களைப் பலிகொண்டும் 12லட்சம் மக்களை அகதிகளாக்கிய இனயுத்தத்திற்கு முடிவுகண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் தமிழீழவிடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்க வேண்டும் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டு மென்பதில் பெரும்பாலான தமிழ்க்கட்சிகளிடம் எந்தவித மானகருத்து முரண்பாடும் கிடையாது.**

தமிழர் விடுதலைக் கூட்ட...

## ஜனாதிபதி-ரணில் சந்திப்பு நேற்று இடம்பெறவில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவுடனான ரணில்விக்கிரமசிங்காவின் சந்திப்பு நேற்று நடைபெறவில்லை.

தறபோதயஅரசியல்நெருக்கடி தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி தலைவர்ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சு நடத்த ஜனாதிபதிஅழைத்த போதும் ரணிலுக்குப் பதிலாக கட்சியின் தவிசாளர் சரித்தரத்வத்த சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் சந்திப்பு ரணிலுடன் மட்டுமேஎனக்கூறிய ஜனாதிபதி சரித்தரத்வத்தவுடனான சந்திப்பை நிராகரித்துவிட்டார் இதனால் இச்சந்திப்பு நேற்றுநடைபெறவில்லை. (வ)

## விமானத்தள தாக்குதல் வெளிநாட்டு தூதர்களுடன்

## மானகருத்து முரண்பாடும் கிடையாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட எம்.பி. மாவை சேனாதிராசா நேற்று இரவு வவுனியாவில் நடைபெற்ற கறுப்பு யூலை பதினெட்டாவது நினைவுக் கூட்டத்தில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

ரெலோ அமைப்பின்வன்னி மாவட்ட எம்.பி செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது

1983ம் ஆண்டு யூலை 25, 27ம் திகதிகளில் வெலிக்கடை சிறைச் சாலையில் இடம் பெற்ற படுகொலைகளை நினைவு கூர்ந்து இக் கூட்டம் நடை பெற்றது.

இப் படுகொலையின் போது குட்டிமணி, தங்கத்துரை, மனோமாஸ்டர், ஜெகன், உட்பட 53 போராளிகள் குரூரமாக கொல்லப்பட்டிருந்

(8ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு தூதர்களுடன் கிரியல்ல பேசுவார்

(கொழும்பு)

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன்கிரியல்ல அமெரிக்கா பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின தூதரக அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான விடுதலைப் புலிகளின்தாக்குதலை அடுத்து அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்றநாடுகள தமது பிரஜைகளை இலங்கைக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவித்திருந்தன.

இதனை அடுத்து எழுந்துள்ள நிலமைகளைச் சமாளிப்பதற்காகவே அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார். (ம)

## பிரதிநிதித்துவம் குறைவதை அனுமதிக்கமாட்டோம் ஆறுமுகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவுடன இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நல்லுறவை வைத்துள்ளது மலையகமக்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் குறைந்து செல்ல வழிவகுக்கும் திட்டத்தை நாம அனுமதிக்கமாட்டோம். என்று ஜனாதிபதி சந்திரிகாவிடம திட்ட

(8ம பக்கம பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்பை மக்கள் எதிர்க்கவேண்டும ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிஅரசினால் ஓகஸ்ட் 21ம் திகதி நடத்தப்படவுள்ள சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பை, இலங்கை மக்கள் அனைவரும் எதிர்க்க வேண்டுமென்று ஜே.வி.பி கோரியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவிக்கையில்,

(8ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா விமானத்தளம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு விமானப்படை இரகசிய ஒத்துழைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தையும், விமானப்படைத் தளத்தையும் விடுதலைப்புலிகள்தாக்கி அழிப்புக்கு உள்வீட்டுசதி முயற்சியாக இருக்காலம்என்ற பேச்சுதற்போது விமானப் படை வட்டாரங்கள் பரவலாகப்பேசப்படுகிறது.

கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அருகாமையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியவர்கள் தொடர்பாக ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்தவிமானப் படையினரிடம் பொது மக்கள் கூறிய போதும்அவர்கள் அது தொடர்பாக அக்கறையை காட்டவில்லையென பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானப் படைத்தளத்தையும் விமான நிலையத்தையும் புலிகள் ஊடுருவித் தாக்கிற வியூகம் விமானப்படையி

8 ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### படிவம்

அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகங்களில் சிறுதொழியர்களுக்கான பதிவேடுகளைப் பதிவு செய்வதற்கான படிவம் விற்பனையாகின்றது விபரங்களை எல்லாத் தபாலகங்களிலும் பார்க்கலாம். முடிவுத் திகதி- 17.08.2001 கல்வித் தகமை குறைந்தது 8ஆம் ஆண்டு. நாயகபாலன் ஸ்ரோர், மனிப்பாய்.

(3407)

### விற்பனைக்கு

திருமந்திரம், திருக்குறள், திருப்புகழ் திரு அருட்பா, பட்டினத்தார் பாடல்கள் பகவத் கீதைஇன்னும் பல தெய்வீக நூல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம்.

(3403)


## தானாகமூடிய திருக்கதவு ஆடிப்பூரத்தன்று திறந்தது

(யாழ்ப்பாணம்)

கடந்த மகாசிவராத்திரி தினத்தன்று தானாக மூடிய உடுவில் சொர்ணசித்தி சமூக விநாயகர் தேவஸ்தான திருக்கதவு இடைவிடாது பஞ்சாட்சர திருமுறைப் பாராயணம் ஒதியதாலும் பஜனை வழிபாடுகளாலும் ஆடிப்பூரத் தினத்தன்று திறந்து கொண்டது.

இதனையடுத்து தற்பொழுது பூசை வழிபாடுகள், அபிஷேக ஆராதனைகள், அபிஷேகம் என்பன சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, மீண்டும் பன்னிரு திருமுறை முற்றோதல் நடத்தல் வேண்டும் என்ற அம்பாளின் அருள்வாக்கினையடுத்து இதற்கான ஏற்பாடுகளை அகில இலங்கைத் திருமுறை மன்றம் மேற்கொண்டு வருகின்றது. (உ)

## அங்கப் பிரதிஷ்டை செய்த பக்த கோடிகளைப் பதம்பார்த்த விசர்நாய்

(யாழ்ப்பாணம்)

அதிகாலைவேளை ஆலய வீதியில் அங்கப்பிரதிஷ்டை செய்துகொண்டிருந்த பக்தர்களை அவ்வழியேவந்த விசர் நாய் கடித்துக் காயப்படுத்தியது.

நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவத்தின் இரண்டாம் நாளான கடந்த வியாழனன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பிரதிஷ்டை செய்துகொண்டிருந்த 8 பேர் காயமடைந்தனர்.

அதிகாலை 5.30 மணியளவில் பக்தர்கள் அங்கப்பிரதிஷ்டை செய்துகொண்டிருந்தவேளை, அவர்களிடையே புகுந்த நாய் வெறிகொண்டு மூர்க்கத்தனமாக இவர்களைக் கடித்துக் குதறியதாக தெரியவந்துள்ளது.

எனினும் பக்தர்கள் தமது நேர்த்திக்கடனை முடித்த பின்பே தனியார், மற்றும் அரச மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சைபெற்றதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியில் யாழ். மாநகரசபையினர் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-6)

## கருத்தரங்கும் செயல் விளக்கமும்

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையும், வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சும் இணைந்து நடத்தும் தென்னைச் செய்கையில் மைற்ஸ் நோயத்தாக்கம் பற்றிய கருத்தரங்கும், செயல் விளக்கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கோட்டடி வில்லூன்றிக் தீர்த்தப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிவல்லவராஜன் கலந்து கொள்வார்.

தென்னைப் பயிர்ச்செய்கை வடபிராந்திய முகாமையாளர் சி சிவச்சந்திரன் 'மைற்ஸ் நோய்க்கட்டுப்பாட்டுத் திட்ட நடைமுறைகள்' என்ற விடயத்திலும்,

யாழ் மாவட்ட தென்னை அபிவிருத்திஉத்தியோகத்தர் ஜெ சத்தியேந்திரன் ''தென்னைச் செய்கையில் மைற்ஸ் நோய்த் தாக்கமும் அதன் கட்டுப்பாடும்'' எனும் விடயத்திலும் விரிவுரையாற்றவுள்ளனர்.

இறுதி நிகழ்வாக தென்னைச் செய்கையாளர்களுக்கு இலவசமாக மைற்ஸ் கொல்லி மருந்து விநியோகமும் அதனை விசிறுவது தொடர்பான செயல் விளக்கமும் இடம்பெறவுள்ளது.

தென்னைச் செய்கையாளர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (உ

## இரண்டாம் தவணை விடுமுறை 40 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் தவணை விடுமுறைக்காக ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி மூடப்படும் பாடசாலைகள் மீண்டும் மூன்றாம் தவணைக்காக செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பை ஒட்டி, க.பொ.த உயர்தரப் பரீட்சை இரு கட்டங்களாக இடம்பெறவுள்ள தாலேயே விடுமுறை வழமையை விட நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-10)த்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அனைத்து அரச திணைக்களங்களுக்குமான ஒருங்கிணைப்புகுழுக் கூட்டம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பதில் பிரதேச செயலர் என். வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-6)

# NOTICE

University of Jaffna
Sri Lanka

FACULTY OF MEDICINE

## New dates for the Examinations

Second MBBS Examination – Practicals and Viva will commence from 30th July 2001

Third MBBS Part II Examination for 18th batch (1995) 06-08-2001

Third MBBS Part I Microbiology Examination for 19th Batch (1996) 13-08-2001

Third MBBS Part I Examination for 20th Batch (1997) will be held as scheduled earlier i.e. 20-08 2001

Registrar
University of Jaffna. Sri Lanka.
2001-07-25

(C 2324)


# NSB 'ரிதிரேகா' விசேட கருமபீடம்

உங்கள் குடும்ப வங்கி

ஒக்டோபர் 2001 இல் நடைபெறவிருக்கும் "ரிதிரேகா" மாபெரும் சீட்டிழுப்பில் 1ம் பரிசு 35 இலட்சத்தை இலக்கு வைத்து யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி, நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் விசேட கருமபீடம் ஒன்றை அமைத்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். இங்கு தாங்கள் விரும்பிய தொகைக்கு ரிதிரேகா சான்றிதழ்களை கொள்வனவு செய்ய முடியும். "ரிதிரேகா" மற்றெந்த சேமிப்புத் திட்டமும் வழங்காத அனுகூலங்களை உங்களுக்கு வழங்குகிறது.

01. முதலிட்ட பணத்தை இழக்காமல் பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறலாம்.

02. பரிசுபெற்ற இலக்கங்கள் அடுத்த சீட்டிழுப்பிலும் நீக்கப்படுவதில்லை என்பதால் ஓர் இலக்கத்தின் பேரில் பலதடவைகள் பரிசுகளை வெல்ல முடியும்.

03. ரிதிரேகா சான்றிதழை வாங்கிய ஒரு வருடத்தின் பின் நீங்கள் விரும்பினால் அதனைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். தோல்வியென்ற பேச்சுக்கே இடமில்லை.

04. ஒவ்வொருவரும் தத்தமது வசதிக்கேற்ப முதலீடு செய்யமுடியுமென்பதால் அதிக பணத்தை முதலீடு செய்து வெற்றி வாய்ப்பை அதிகரிக்கலாம்.

05. பிறந்த நாள், திருமணம் போன்ற எந்த நிகழ்ச்சிகளுக்கும் எவராலும் வழங்கக்கூடிய அதி உன்னத பரிசு இதுவே.

எனவே ரிதிரேகாவில் தவறாது ஒவ்வொருவரும் பணத்தை முதலீடு செய்து தங்கள் அதிர்ஷ்டத்தை பரீட்சியுங்கள்.

உங்கள் குடும்ப வங்கி

# தேசிய சேமிப்பு வங்கி

(C.2323)

## நாட்டு மக்களின் அடிப்படை

# ஜனநாயக உரிமைகளைத் தடுக்க அரசுக்கு அதிகாரம் கிடையாது

(கொழும்பு)

ஒரு ஜனநாயக நாட்டில் அந் நாட்டு மக்களுக்கு ஒன்று கூடும் சுதந்திரம, கருத்து சுதந்திரம் என்பன அடிப் படை ஜனநாயக உரிமைகளா கும் இவற்றை தடுப்பதற்கு அரசுக்கு எந்த உரிமையும் கிடையாது.

இவ்வாறு மனிதவுரிமை களுக்கு அபிவிருத்திக்கு மான சட்டதரணிகள் சங்கம்கடந்த 19 ஆம் திகதி ஐ தே. கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதுபொலிஸாரால்மேற் கொண்ட வன்முறைகளை கண்டித்து விடுத்த அறிக்கை யில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

இத்தகைய நிகழ்வுகள் சுதந் திர பொலிஸ் ஆணைக்குழு, சுதந்திர ஊடக ஆணைக்குழு, அமைக்க வேண்டும் என்ற ஐ தே. கடசியின் கோரிக்கை கள் மக்கள் மத்தியில் வலு வடையவே உதவும்.

எனவே. இத்தகைய நிகழ்வு களை அரசு கைவிட்டு மக் களின் விருப்புகளை மதிக்க வேண்டும் என அவ்வறிக்கை யில் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது. (உ)

## சமூகக் கல்விப் போட்டி யாழ். வலய முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயப் பாடசாலை களிடையே அண்மையில் நடத் தப்பட்ட சமூகக் கல்விப் போட்டி முடிவுகள் வருமாறு:

முதல்5இடங்களைப்பெற்ற மாணவர்களின் பெயர் பாட சாலை ரீதியாகத் தரப்படு கிறது

### பாடசாலை வகை- I

**தரம் 6- 7**

த. ஆனந்தசேகர் யா- கொக்குவில் நாமகள் வித்தி, து. சுதாகரன் யா- இளைய தம்பி இ வி யாழ்ப்பாணம், செ யசோந்தினி நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை, உ. துஸிகா யா- கொக்குவில் நாமகள் வித்தி, இ கிருஸா யினி இளையதம்பி இ. வி. யாழ்ப்பாணம்.

**தரம் 8- 9**

யோ நிரோஸா பத்தமேனி இரடனேஸ்வரி வித்தி செ யசோதரன் நீர் வேலி சி சி. த க பாடசாலை, சு. சுரேஸ்குமார் கொக்குவில் நாமகள் வித்தி. அ. திவ்வியா நீர்வேலி சி. சி. த. க. பாட சாலை. த. புஷ்பகலாகலட்டி மெ மி. த. க பாடசாலை.

**தரம் 10- 11**

அ. சிராணி அனுசியா நல் லூர் தெற்கு விகினேஸ்வர வித்தி, த. மிதுனா கந்தர்மடம் சைவப்பிரகாச யாழ்ப் பாணம், அ அரவிந்தன் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி யாழ்ப்பாணம், சி. கோகுலன் கொழும்புத் துறை துரையப்பா வித்தி, த விஜிதரன் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.

### பாடசாலை- II

**தரம் 6- 7**

அ பகிர்தா கரந்தன் இரா முப்பிள்ளை வித்தி, சி நுகு ணாயி கொட்டடி நமசிவாய வித்தி, ச காஞ்சனா நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாட சாலை, இ. பவித்ரா சரவண பவானந்த வித்தி கோப்பாய், ச. தாரிணி கரந்தன் இராமுப் பிள்ளை வித்தி.

**தரம் 8 9**

ப. பத்மிநிருபா கொழும் புத்துறைஇ ம வித்தி, வி கிரு ஸானந்தன் வண். நாவலர் ம வித்தி. க. ஹரிஹரன் ஸ்ரீராமகிருஸ்ணா வித்தி கொக்குவில, யோ. பிரன்ரா வானுயி புனித திரேசா மக ளிர் வித்தி.

சி. அன்ரலக்கா பாஷையூர் புனித அந்தோனியார் பெண கள் வித்தி,

**தரம் 10-11**

செ சுவர்ணா கோப்பாய் ம. வி, பு மைதிலி செங் குந்தா இந்துக் கல்லூரி, த நிசாந்தன் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி புத்தூர், லி ரேகா இராமகிருஸ்ணா ம விகோண்டாவில் சி. வாசுகி புனித திரேசாள் மகளிர வித்தி அச்சுவேலி,

**தரம் 12-13**

க. அரவிந்தன் செங் குந்தா இந்துக் கல்லூரி. ஆ. யசோதரன் இராமகி ருஸ்ண ம வி கோண்டாவில், ஜெ மதியழகிபுனித ஜேம்ஸ் மகளிர் வித்தி, யே. மதி வாணி புனித ஜேம்ஸ்மகளிர் வித்தி, செ. சகுந்தலாதேவி புனித திரேசாள் மகளிர் வித்தி அச்சுவேலி,

### பாடசாலை வகை III

**தரம் 6- 7**

ச: நிரோசன் கனகரத்தி னம் ம. ம வி, ப: துளசி உரும் பிராய்சைவத்தமிழ், ச. தனிஸ் அச்சுவேலி மத்திய கல்லூரி. சி. லக்சனா நீர்வேலி அத்தி யார் இந்து. ந. துர்க்காபெரிய புலம் ம. வி,

**தரம் 8 9**

சி. கமலதீசன் அச்செழு சைவப்பிரகாச, பூ ராஜ்வி னோத் அச்செழு சைவபபிர காச, சி வினோரா உரும் பிராய்சைவத்தமிழ், பா. வினோயா உருமபிராய் சைவத்தமிழ். ஸ்ரீ தயாபரன் ஆவரங்கால நட இராமலிங்க, தே. யுகுனா ஆவரங்கால் நட,

**தரம் 10 - 11**

கே மறிற்றா றேசினி கன் னியர் மடம் ம வி. ந. தவ ராசா, புனித சாள்ஸ் ம. வி, த நிவேதிகா பெரியபுலம் ம. வி, ச நிலக்சன் புனித சாள்ஸ் ம. வி, ப. யூட்லின்சன் புனித சாள்ஸ் ம. வி,

**தரம் 12-13**

த. செளரியா, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ம. கிறிஸ்ரின். அத்தியார் இந்துக் கல்லூரி. ப. யுட் பிறின்சன் புனித சாள்ஸ் ம வி, த. ரஜ்தமார் அச்சு வேலி மத்திப கலலூரி சி நீர ராஜா அச்சுவேலி மததிய கல் லூரி

### பாடசாலை வகை IV

**தரம் 6-7**

த. சஞ்சயன் யா-இந்துக் கல்லூரி, த. துஸ்யந்தி யா- வேம்படி மகளிர் கல்லூரி, எம் நிவின்நிசாந்தன், புனித பத்திரிசியார் கல்லூரி, நு. நித்தியா யா-இந்து மக ளிர் கல்லூரி, வி. அன்ரன் றோய் புனித பத்திரிசியார் கல்லூரி,

**தரம் 8-9**

ந வாணி யா-கொக்குவில் இந்துக் கல்லூரி, வ. திவாகர் யா-பரியோவான் கல்லூரி, சு றொசாந்தன் யா-இநதுக் கல்லூரி, சு. சர்மிலன் யா- இந்துக் கல்லூரி, ஜோய் டெனிஸ்ரியன் புனித பததிரி சியார் கல்லூரி. அ சமிக்கா திருக்குடும்ப கன்னியர் மடம்,

**தரம் 10-11**

இ. இராமவித்தியா யா- வேம்படி மகளிர் கல்லூரி, ப சநாதநி யா- இந்து மகளிர் கல்லூரி, ஜே ஜெயப்பிரியா யா-இந்து மகளிர் கல்லூரி. ச. தனராஜ யா-பரியோ வான் கல்லூரி. ஜே. பிரதீபா யா-சுண்டுக்குளி மகளிர் கல் லூரி, வி. கௌசல்யா யா- கொக்குவில் இந்துக் கல்லூரி, கோ. நிசாந்தன் யா-இந்துக் கல்லூரி.

**தரம் 12-13**

வி. தனுசன் யா-பரியோ வான் கல்லூரி இ. கேதார சர்மா யா- இந்துக் கல்லூரி சு கிரிவக்ஸன் யா-பரியோ வான் கல்லூரி, சு. நிருத்திகா யா-வேம்படி மகளிர் கல்லூரி லோ. விஜேந்திரன் யா- கொக்குவில் இந்துக் கல்லூரி,

## ஒரு மில்லியன் நிதி உதவி

(சுண்டுக்குளி)

யாழ் உதை பந்தாட்டச் சங்கத்தின் அபிவிருத்தி கருதி ஒரு மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்கம் தெரி வித்துள்ளார்.

அண்மையில் அமைச்சரு டன், உதை பந்தாட்டச் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து தமது தேவைப்பாடுகள் குறித்து விளக்கிய சமயம் இந் நிதி உதவிக்குஇணக்கம் தெரி விக்கப்பட்டது. (உ-110)

## பற்றைகள் அகற்றப்படுகின்றன

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பிரதான வீதியில சேதமடைந்த வாடி வீடுகள் இருக்கும் பகுதியில் உள்ள பற்றைகள் இராணு வத்தினரால் அகற்றப்பட்டு வருகின்றது.

இவ்வாடிவீடுகள் போர்ச் சூழலால் முற்றாக சேத மடைந்திருப்பதால் அவற்றை மூடி அதிகளவான பற்றைகள் நீண்டகாலமாக வளர்ந் திருக்கின்றமை இங்கு குறிப் பிடத்தக்கது. (உ-59)

## சுற்றுமதில் அமைப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணப்பொது நூல கத்தை சூழ சுற்றுமதில் அமைக்குமபணி துரிதவேகத் தில் நடைபெற்று வருகின் றது.

நூலகத்தின்கட்டட திருத்த வேலைகளின பெருமபகுதி பூர்த்தியாகிவரும் இவ் வேளையில் முற்றாக சேத மடைந்திருந்த சுற்றுமதில் விரைவாக புனரமைக்கப் பட்டுவருவது இங்கு குறிப்பி டத்தக்கது. (உ-59)

## படையினர் பற்றைகளை அகற்றுகின்றனர்

(மந்திகை)

நெல்லியடி நகரின்பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் காணபபட்ட மரங்கள் மற் றும் பற்றைகள செடி, கொடி களை பாதுகாப்பு முன்னேற் பாடாக படையினர் அகற்றி வருகின்றனர். (உ-23)


## தொலைக் கல்வி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொலைக் கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான முதலாம் ஆண்டுப் பரீட்சைஇன்றுநெல் லியடி மத்திய மகாவிதியா லயதத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி யட்டைகள் கிடைக்கப்பெறா தவர்களை பரீட்சை மண்ட பத்தில் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுளளது. (உ-10)

## நல்லூரான் திருவடிக்கு-4



### தண்ணொளிக்காப்பினைத் தா

பன்னிரு கண்களால் பார்த்தெனைப் பற்றினால்
என்னுரு என்னாகும் ஈசனே- எண்ணிடு
உன்னொரு கண்கடை உந்திய பார்வையால்
தண்ணொளிக் காப்பினைத் தா

நயினைச்சோதி

### 'வந்தித்து அவனடியே வணங்கு'

தொடர்ந்து வருயுத்தகளம் தொலைந்துமே போய கன்று
தடம்பதித்த துயரகன்று தாய்மண்ணில்- திட முடனே
செந்தமிழர் வாழுநிலை செவ்வேலா தாவென்று
வந்தித்து அவனடியே வணங்கு

செ. சுதாகரன்

### உயிர்க்குயிரானவா ஓடிவா!

கடலென்னப் பரந்திட்ட கருணையனே கந்தா
கவலையெனும் சேற்றிடைக் கவன்றும்
உடம்பெடுத்து உலகிடையே பிறந்த நாள் முதலாய்
உன்னையேயென் துணையென் றிருந்தேன்
இடரெனைவந் தின்னுமேதான் மிக்கச் சூழுமோ
இரவிமுன்னே இருளாய்ப் போகுமோ
உடலுக்குள் உயிர்க்குயிரா னவனே யோடிவா
உன் வாயால் ஒருபதில் மொழிதா

நா. நவராஜ்

### மக்கள் தீர்ப்புக்கு முடிவு

வானத்தில் பாயும் வெள்ளை நதிகள்
வள்ளி தெய்வானைக்கு சாமரைகள் வீசும்
மௌனத்தில் வாழும் வெற்றி வேல்கள்
மக்கள் தீர்ப்புக்கு முடிவுரைகள் எழுதும்

வீதியில் சுற்றும் புள்ளிமயில்
வேதனை தொலைய முருகனைச் சுமக்கும்
நாதப் பிரம்மத்தின் நல்லைச் சிகரம்
நாளைய வாழ்வை விழியில் இமைக்கும்

நெல்லை மகேஸ்வரி

### முருகா அருளே தருவாய்!

முருகா முருகா என்றுன்
திருநாமம் சொல்வோர்க்கு
ஒரு குறையும் வைக்காத முருகா
வருவாய் எமக்கு அருளே தருவாய்

முருகா முத்துக்குமரா கந்தா கடம்பா!
அருளிற்கு உறைவிடமானவனே முருகா!
ஒரு நாளும் மறவா அடியார்க்கு
தருவாய் அருளே திருமுருகா!

தர்மராஜா அஜந்தகுமார்

### பெரும் பொருளே முருகையா

தேவர் துயர் துடைத்திட்ட முருகையா
தேசம் எங்கும் அமைதிகாண அருளையா
ஓசைகளில நிறைந்திருப்பாய் முருகையா
ஓலங்களை தவிர்த்திடுவாய் முருகையா
அசுரர்க்கு கற்பித்த முருகையா
ஆதரித்து அருள் கொடுப்பாய் முருகையா
கண்டவர் வியந்திடும் எழிலோனே
காவிய நாயகனே முருகையா

நல்லை மண்ணின் நாயகனே முருகா
நாளும் உனை வேண்டுகிறோம் முருகா
வன்னி மண்ணில் எம்மவர்கள் முருகா
வாடி வதங்கிறார் முருகா
சொந்தங்களைப் பிரிந்தின்று முருகா- இங்கு
சோர்ந்து மடிகின்றார் முருகா
சோதனைகள் போதுமப்பா முருகா
அற்புத பெரும் பொருளே முருகா

எம்.எஸ்.எஸ். கீர்த்தி

# சேதமான வர்த்தக நிலையங்களை

# புகைப்படம் எடுக்க அனுமதி

## வழங்கக்கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

(மந்திகை)

யுத்த அனர்த்தங்களினால் சேதமான சாவகச்சேரி நகர் வர்த்தக நிலையங்களை புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி கோரி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

மேற்படி கடிதத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளில் சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள சுமார் 350 ற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன.

சங்கத்தின் எல்லைப் பரப்பில் அமைந்துள்ள சங்கத்தின் அங்கத்தவர்கள் சேதமடைந்த கட்டிடங்களுக்கு புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து பெறும் நஷ்ட ஈடு மற்றும் நஷ்ட ஈட்டுக்கடன் விண்ணப்ப படிவங்களில் சேதமடைந்த வர்த்தக நிலையங்களின் புகைப் படம் இணைக்க வேண்டியுள்ளதால் சாவகச்சேரி நகருக்கு இரு புகைப் படப்பிடிப்பாளர்கள் சென்று படம் பிடிக்க அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர், செயலாளர் ஒப்பமிட்ட இக்கடிதத்தின் பிரதிகள் பலாலி, சாவகச்சேரி இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## ஏழைச் சிறுமியின் உயிரைக் காக்க உவந்தளிப்பீர் நிதி

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 15 வயதான சிறுமி செல்வி ஜிஜினா செபமாலை முத்து இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவரது இருதயத்தின் இரண்டு நாளங்கள் சுருங்கியுள்ளதால் அவருக்கு உடனடியாக சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

தந்தையை இழந்து தாய்க்கு இந்தக்குழந்தைக்குவேண்டிய 3 இலட்சம் நிதியை அளிக்க வேண்டியதுதயாள சிந்தை கொண்ட உங்களின்பொறுப்பு

சிறுதுளி பெருவெள்ளம நீங்கள் ஒவ்வொருவரும். அளிக்கப் போகும் நிதியுதவி ஒரு உயிரைக் காப்பாற்ற போகிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

உங்களின் உயிர்காப்பு நன்கொடையை ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் 90557 கணக்குஇலக்கத்துக்கு அனுப்பி சிறுமியின் உயிரைக் காக்க உதவுங்கள்

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(தொடர்ச்சி)

ஜூலை மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 197?61 சி | 197977 ஏ |
| 198002 ஏ | 198892 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 185105 ஏ | 185105 பி |
| 185288 ஏ | 189552 ஏ |
| 191912 ஏ | 192028 ஏ |
| 193641 ஏ | 193642 ஏ |
| 193661 ஏ | 193661 பி |
| 194360 ஏ | 194360 பி |
| 194360 சி | 194369 ஏ |
| 194925 ஏ | 195034 ஏ |
| 195812 ஏ | 195834 ஏ |
| 195968 ஏ | 195968 பி |
| 195968 சி | 195968 டி |
| 195968 ஈ | 196012 ஏ |
| 196029 ஏ | 196029 பி |
| 196030 ஏ | 196049 ஏ |
| 196059 ஏ | 196059 பி |
| 196056 சி | 199932 ஏ |
| 196972 ஏ | 196972 பி |
| 196972 சி | 196974 ஏ |
| 197008 ஏ | 197037 ஏ |
| 197040 ஏ | 197084 ஏ |
| 197134 ஏ | 197163 ஏ |
| 197163 பி | 197176 ஏ |
| 197178 ஏ | 197188 ஏ |
| 197188 பி | 197195 ஏ |
| 197852 ஏ | 197874 ஏ |
| 197898 ஏ | 197898 பி |
| 197904 ஏ | 197949 ஏ |
| 197949 பி | 197957 ஏ |
| 197957 பி | 197996 ஏ |
| 198055 ஏ | 198055 பி |
| 198055 சி | 198055 டி |
| 198107 ஏ | 198114 ஏ |
| 198126 ஏ | 198132 ஏ |
| 198132 பி | 198148 ஏ |
| 198658 ஏ | 198801 ஏ |
| 198801 பி | 199522 ஏ |
| 199528 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 193738 ஏ | 194465 ஏ |
| 194495 பி | 194897 ஏ |
| 195954 ஏ | 195955 ஏ |
| 196038 ஏ | 196912 ஏ |
| 196912 பி | 196914 ஏ |
| 196914 பி | 196915 ஏ |
| 196915 பி | 187002 ஏ |
| 197020 ஏ | 197020 பி |
| 198023 ஏ | 197076 ஏ |
| 197104 ஏ | 197105 ஏ |
| 197105 பி | 197105 சி |
| 197199 ஏ | 197856 ஏ |
| 197868 ஏ | 197868 பி |
| 197868 சி | 197889 ஏ |

| | |
|---|---|
| 197912 ஏ | 198057 ஏ |
| 198057 ஏ | 198 44 ஏ |
| 198686 ஏ | 198686 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 201181 ஏ | 201181 பி |
| 201360 ஏ | 185182 ஏ |
| 186933 ஏ | 186933 பி |
| 186946 ஏ | 186947 ஏ |
| 190480 ஏ | 190480 பி |
| 190480 சி | 190598 ஏ |
| 190598 பி | 190598 சி |
| 190598 டி | 190684 ஏ |
| 190694 ஏ | 19 751 ஏ |
| 191751 பி | 192071 ஏ |
| 192071 பி | 192345 ஏ |
| 192416 ஏ | 192416 பி |
| 193732 ஏ | 194213 ஏ |
| 194224 ஏ | 194300 ஏ |
| 194364 ஏ | 194433 ஏ |
| 194433 பி | 194435 ஏ |
| 194435 பி | 194876 ஏ |
| 194950 ஏ | 194967 ஏ |
| 194967 பி | 194967 சி |
| 195056 ஏ | 195056 பி |
| 195056 பி | 195056 சி |
| 195071 ஏ | 195071 பி |
| 195071 சி | 195071 டி |
| 195071 ஈ | 195071 எப் |
| 195071 ஜி | 195094 ஏ |
| 195860 ஏ | 195860 பி |
| 195860 சி | 195860 டி |
| 195860 ஈ | 195868 ஏ |
| 195869 ஏ | 195869 பி |
| 195869 சி | 195872 ஏ |
| 195872 பி | 195372 சி |
| 195872 ஏ | 195873 ஏ |
| 195924 ஏ | 195944 ஏ |
| 195946 ஏ | 195953 ஏ |
| 196073 ஏ | 196082 ஏ |
| 196918 ஏ | 196918 பி |
| 196919 ஏ | 196983 ஏ |
| 196983 பி | 196986 ஏ |
| 196987 ஏ | 196988 ஏ |
| 197081 ஏ | 196014 ஏ |
| 197085 ஏ | 197086 ஏ |
| 197087 ஏ | 197087 பி |
| 197094 ஏ | 197094 பி |
| 197099 ஏ | 197099 பி |
| 198108 ஏ | 197108 பி |
| 197137 ஏ | 197147 பி |
| 197149 ஏ | 197155 ஏ |
| 197861 ஏ | 197863 ஏ |
| 197863 பி | 197863 சி |
| 197863 டி | 197864 ஏ |
| 197939 ஏ | 197956 ஏ |
| 197965 ஏ | 197982 ஏ |
| 197985 ஏ | 197993 ஏ |
| 197994 ஏ | 198005 ஏ |
| 198005 பி | 198005 சி |
| 198005 டி | 198072 ஏ |
| 198073 ஏ | 198073 பி |
| 198100 ஏ | 198100 பி |
| 198116 ஏ | 198130 ஏ |
| 198136 ஏ | 198 36 பி |
| 198137 ஏ | 198987 ஏ |

## இராசி பலன்

28. 7. 2001
(ஆடி 12 சனி)
அட்டமி மு ப 8.52 வரை
சுவாதி பி ப 2 14 வரை
ராகுகாலம் 9 02-10 32
நல்ல நேரம் 3 02-4. 32
அமிர்த சித்தம்,
சுந்தர மூர்த்தி நாயனார்
குருபூசை

**மேடம்**
வாகனவசதி, சுவாரஸ்யம், காரிய அனுகூலம், தனலாபம்.

**இடபம்**
காரிய நன்மை, புதிய முயற்சி, மனமகிழ்ச்சி, பகைவர் விலகுவர்.

**மிதுனம்**
புத்திரரால் கவலை, காரிய இடையூறு, மனச்சோர்வு, கௌரவக் குறைவு.

**கடகம்**
தன்னம்பிக்கைக் குறைவு, கல்விச் சிறப்பு, முயற்சிதாமதம், வியாதி.

**சிங்கம்**
தனவரவு, முயற்சி வெற்றி, அந்நியர் சந்திப்பு, பிரயாணம்.

**கன்னி**
வாக்கு கலகம், வீண் செலவு, காரிய தாமதம், செல்வாக்கு குறைவு.

**துலாம்**
ஆழ்ந்த சிந்தை, தேகநலன், புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம்.

**விருச்சிகம்**
காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம, நிலைக் கேடு, பணச் செலவு.

**தனுசு**
காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை, புகழ்.

**மகரம்**
நல்ல செய்தி, சுபநிகழ்வு, தொழில் சிறப்பு, அதிகாரம்.

**கும்பம்**
வயிற்றுக் கோளாறு, பிரயாணம், மனச்சஞ்சலம, அரச ஆதரவு.

**மீனம்**
பிரயாண பயம், உறவினர் மனஸ்தாபம், உடல்நலக் குறைவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்-

# செய்தித் துளிகள்

## ரூ 15 லட்சம் கொள்ளை

[கொழும்பு]

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தகப்பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் ஊழியர்களின் 15 இலட்சம்ரூபா சம்பளப்பணம் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற இக்கொள்ளைச் சம்பவத்தில் தனியார் வங்கி ஒன்றிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட வேளைதபால் நிலையத்திற்கு அருகில் வைத்தே கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. (ந-105)

## கடற்றும்பி தாக்கி காயம்

(மந்திகை)

பருத்தித்துறை கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை கடல் தும்பி தாக்கியதில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செவ்வாயன்று அதிகாலை 5 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் பருத்தித்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த அருள்தாஸ் அல்பிரேட் றீகன் (வயது 19) என்பவரே காயமடைந்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## கூடைப் பந்தாட்டம்

(மந்திகை)

வடமராட்சிப் பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி தொண்டர்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளின் தொடரில், வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச அபிவிருத்தித் தொண்டர்களுக்கிடையிலான கூடைப் பந்தாட்டப் போட்டியில் வடமராட்சி தெற்கு மேற்கு அணி வடமராட்சி வடக்கு அணியை 19 இற்கு 09 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (உ-23)

## விவசாய மீன்பிடி குழுக் கூட்டம்

(வண்ணார்பண்ணை)

வேலணை பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பிரதேச விவசாய மீன்பிடி குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அடுத்த கூட்டம் இன்று நடைபெறும் எனவும் இக் கூட்டத்தில் விவசாயம், கடற்றொழில் சார்பான விடயங்கள் விரிவாக ஆராயப்படவுள்ளதால் சகல மீன்பிடி சங்கங்களின் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-109)

## கல்விச் செயலமர்வு

(கோப்பாய்)

முரண்பாட்டுத்தீர்வு சம்பந்தமான கல்விச் செயலமர்வு நிகழ்வுகள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதற்கிணங்க சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் 29, 30 ஆம் திகதிகளிலும் மாணவர்களுக்கான செயலமர்வுகள் 31, 1 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளதாக கோப்பாய்க்கோட்டக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-79)

## மீனவர்கள் வேண்டுகோள்

[வண்ணார்பண்ணை]

நயினாதீவு மீனவர்கள் தங்களுடைய சகல நிர்வாகப் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக வேலணைக்கு வர வேண்டிய சிரமத்துக்கு உள்ளாவதாகவும், நயினைதீவு மீனவர்களையும் அதன்சங்கங்களையும் ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழில திணைக்களத்துடன் இணைக்க வேண்டும் எனவும் இது சார்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேலணை பிரதேசஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-109)

## கிராம அலுவலர்கள் உதவி

(வண்ணார்பண்ணை)

வேலணை பிரதேசத்தில் சட்ட விரோத மின்இணைப்புகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக மின்சார சபை பிரதிநிதி வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக் காட்டியதையடுத்து, மின்சார சபை ஊழியர்கள் சட்ட விரோத மின் இணைப்பை துண்டிப்பதற்கு கிராம சேவை அலுவலர்கள் உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். (உ-109)

## மேலதிக பாதுகாப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து கண்டி தலதா மாளிகையின் பெரஹராவுக்கு மேலதிக பாதுகாப்புஏற்படுத்தப்பட்டு,

பெரஹர முடியும் வரை 5 ஆயிரம் பொலிஸார் கடமையிலீடுபடுத்தப் பட்டுள்ளனர்;

கண்டி நகருக்குள் நுழையும் வாகனங்கள யாவும் கடுமையான சோதனைகளுக்குள்ளாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் புனித மரியன்னை தேவாலய திருநாள்திருப்பலி எதிர் வரும் ஆவணி மாதம் 6 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருப்பலி நடைபெற்று 15 ஆம திகதி திருநாள் திருப்பலியும், திருச்செபரூப திருப்பவனியும் இடம் பெறவுள்ளன. (செ-6)

## திருமலையில் பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

திருகோணமலை நகர்ப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தபபட்டுள்ளது.

புறநகர்ப் பகுதிகளில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் நகருக்குள் நுழையும் வாகனங்களும் துருவித்துருவி சோதனையிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## ஒத்திவைப்பு

(சுண்டுக்குளி)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அதில் அங்கம் வகிக்கும் கழக அணிகளுக்கு இடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட போட்டித் தொடரில், நேற்று தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த போட்டிகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-110)

## இன்று ஒரு தகவல்

# சொர்க்கத்தில் கால்

துறவி ஒருவருக்கு நரகத்தையும், சொர்க்கத்தையும் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. நேராக நரகத்திற்குச் சென்றார். அங்கே ஒவ்வோர் இடமாகப் பார்த்துக் கொண்டே வந்தார். ஓரிடத்தில் ஒரு கால் மட்டும் இல்லாத நொண்டி ஒருவன் இருந்தான். அவனிடம் ''நீ யார்? ஏன் நரகத்திற்கு வரவேண்டி வந்தது என்று கேட்டார்''

''துறவியாரே! நான் மண்ணுலகில் பெருஞ் செல்வனாக இருந்தேன். நிறையப் பாவங்களைச் செய்ததால் இங்கே நரகத்தில் துன்பப்படுகிறேன்' என்றான் அவன். துறவி நரகத்தை விட்டு நீங்கிச் சொர்க்கத்திற்குள் நுழைந்தார். அங்கே எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தனர். அவரும் ஒவ்வோரிடமாகப் பார்த்துக் கொண்டே வந்தார். ஓரிடத்தில் ஒரு கால் மட்டும் தனியாக இருந்தது. அதைப் பார்த்துத் துறவி வியப்பு அடைந்தார். பக்கத்திலிருந்த ஒருவரை அழைத்து ''ஆள் இல்லாமல் ஒரு கால் மட்டும் சொர்க்கத்திற்கு வந்தது எப்படி?'' என்று கேட்டார்.

அதற்கு அவன் 'துறவியாரே! இந்தக் காலுக்கு உரியவன் கொடிய பாவி. அவன் செய்யாத பாவம் இல்லை. ஆனாலும் ஒரே ஒரு முறை தாகத்தால் தவித்த ஒரு மாட்டிற்கு இரங்கித் தொலைவிலிருந்த தண்ணீர்த் தொட்டியை இந்தக் காலினால் உதைத்து அதனருகில் தள்ளினான். அந்தப் புண்ணியத்தால் தான் இந்த ஒரு கால் மட்டும் இங்கு உள்ளது. அவனோ நரகத்தில் துன்பப்படுகிறான்' என்று விளக்கம் தந்தான்.

பேராசிரியர் எ. சோதி

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம்

(கொழும்பு)

ஸ்ரீலங்காவில் மிகவும் அண்மையில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் கவலையும் ஏமாற்றமும் தருவனவாயிருக்கின்றன என்று தெரிவித்துள்ள இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டிருக்கிறது.

பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணும் முயற்சிகளில் வன்முறைக்கும் பயங்கரவாதத்திற்கும் இடமில்லை, என்றும் இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவின் ஐக்கியம், இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பன பேணப்படும் அதேவேளை மக்களின் சகல பிரிவினரதும் அபிலாசைகளைதீர்க்கும் விதமான தீர்வு காணப்படுதல் வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ)

# வல்வைப் பகுதியில் மாடுகள் திருட்டு

(மந்திகை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் இரவு வேளையில் மாடுகள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி வாசிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மீவளபொலிகண்டியிலுள்ள ஆனந்தசிவம் என்பவரது வீட்டில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பால் மாடு திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை இப்பிரதேசத்தில் 20 இற்கும் மேற்பட்ட மாடுகள் திருடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (உ-23)

# சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்ய கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய லலித் முன்னணியின் விசேட செயற்குழு, அரசாங்கத்தின் கருத்துக் கணிப்பை ரத்துச் செய்துவிட்டு, பாராளுமன்றத்தை ஜனாதிபதி கூட்ட வேண்டும் என்று கோரியுள்ளது.

அரசியலமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனபதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, அத்தகைய மாற்றமெதுவும் பாராளுமன்றத்தினூடாகவே ஏற்படுத்தப்பட வேண்டும். இன்று நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் கருத்துக் கணிப்பு அவசியமற்றது என்று அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பதவியேற்பு வைபவம்

(புலோலி)

வடமராட்சி லயன்ஸ் கழக இவ்வாண்டிற்கான பதவியேற்பு வைபவம் பருத்தித்துறை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமண்டபத்தில் இன்று லயன் என் சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்திலே பிரதம விருந்தினராக பிராந்தியத் தலைவர் லயன் ஆர் நடராஜா கலந்து கொள்ளவுள்ளார். இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம் திருநாவுக்கரசு பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார். (உ-52)

# ஆங்கில கற்பித்தல் உபகரணங்கள் கையளிப்பு

ஏசியா புவுண்டேசன் நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் உதவியுடன் வழங்கப்பட்ட ஒரு தொகுதி ஆங்கில கற்பித்தல் உபகரணங்களை யாழ்.பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரப்பிள்ளை யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலத்திடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

ஒலி, ஒளி நாடாக்களை உள்ளடக்கிய பயன் மிக்க இந்தஉபகரணத் தொகுதிகள் யாழ். மத்திய கல்லூரிக்கும் வழங்கப்படவுள்ளன.

இவ் உபகரணத் தொகுதிகளை கொழும்பிலிருந்து இங்கு எடுத்து வருவதற்குரிய சகல ஒழுங்குகளையும்துணைவேந்தர் மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-15)

# பண்ணைப் பலத்தினால் செல்லும் பயணிகள் சிரமம்

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதிகளுக்கான ஒரே ஒரு தரைவழிப்பாதையில் அமைந்துள்ள பண்ணைப்பாலம் புனரமைப்பு வேலையினை கடந்த வருடம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டனர்.

ஆனால் அப்பாலம் தற்பொழுது சேதமடைந்த நிலையில் உள்ளது எனக்கூறி போக்குவரத்துச் செய்யும்பயணிகள் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு நடந்து செல்லுமாறு இராணுவத்தினர் பணித்து வருகின்றனர்.

இதனால்பயணிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதுடன் 300 மீற்றர் தூரத்திற்குள் இருதடவைவாகனத்தில் இருந்து இறங்கிஏற வேண்டிய நிலையில் இருப்பதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர். [உ-75]

# சேமிப்பு வங்கியில் உற்சவகால கருமபீடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி உற்சவ கால கருமபீடமொன்றை நல்லூர் இந்து விடுதிக்கு அண்மையில் திறந்துள்ளது.

இதனை யாழ்ப்பாண நகர ஆணையாளர் இ. இராமலிங்கம் இக்கருமபீடத்தைதிறந்து வைத்தார்.

இதனூடாக விரைவில் வீடமைப்புக் கடன் வழங்கவுள்ளதாக யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர்எம். சிவானந்தா தெரிவித்தார். (உ)

# உதை பந்தாட்டப்பயிற்சி இரு தினங்களால் நீடிப்பு

(சுண்டுக்குளி)

லண்டனிலிருந்து யாழ். வந்துள்ள உதைபந்தாட்ட வல்லுநர் எம். பிரான்சிஸ் வழங்கி வந்தஉதைபந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைய நீடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

எனினும் இன்று பருத்தித்துறை லீக் அணிக்கும் யாழ். லீக் அணிக்கும் இடையில் அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் லீக்குகளிற்கு இடையே நடத்தப்பட்டுவரும் போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதால் அன்று பயிற்சிகள் நடைபெற மாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-110)

# இராணுவத் தளம் விமான நிலையத்துடன் இணைந்திருப்பது தவறு

(கொழும்பு

ஒரு இராணுவத்தளம் விமான நிலையத்துடன் இணைந்து இருத்தல் ஆகாது என அண்மையில் கட்டுநாயக்க விமானத்தளம் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த தாக்குதல் மற்றும் அதனால் உண்டான விளைவுகள் குறித்து தொலைக்காட்சி யூடாக கருத்துக் கூறுகையில் விமான சேவைகளுக்குப் பொறுப்பான அதிகாரி லியனஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஒரு விமானப் பயணிக்கும் காயம் கூட ஏற்படாத முறையில் நன்கு திட்டமிடப்பட்டு இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். (உ)

# ஓய்வு பெற்றார்

(புலோலி)

இலங்கை மின்சாரசபை பருத்தித்துறை மின் அத்தியட்சகர் எஸ். இராஜலிங்கம் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

இவரின் இடத்திற்கு இலங்கை மின்சாரசபை யாழ்ப்பாண அலுவலகத்தில் பணியாற்றிய மின் அத்தியட்சகர் எஸ். செல்வச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-52)

# 95 குடும்பங்களுக்கு வாழ்க்கைத் தரம் உயர 10 ஆயிரம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேசத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இப்பிரதேசத்தில் வாழும் 95 குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுபிரதேச சபைத் தலைவர் புலவர் அரியநாயகம் தலைமையில் நெடுந்தீவு பிரதேச சபை மண்டபத்தில் கடந்த செவ்வாய் அன்று இதற்கான காசோலை வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

இதற்குரிய முழுப்பலனும் மக்களைச் சென்றடைய வேண்டுமென்பதில் அமைச்சர் அக்கறையாக உள்ளார். எனவே அமைச்சரின் விருப்பத்திற்கு மக்களாகியநீங்கள் முழுமனதோடு ஆதரவு அளிக்க வேண்டுமென்றார். (உ)

# நெடுந்தீவுப்பகுதி முன்பள்ளி ஆசிரியர் நிரந்தர நியமனம்விரைவில்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள அனைத்து அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பொலிஸார் இராணுவ தலையீடு இல்லாதும் ஊரடங்குசட்டம் அமுலில் இல்லாத நிலையில் சாதாரண சூழ்நிலையில் அமைதியாக மக்கள் வாழும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு நெடுந்தீவுதான் என்று பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறு நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவா புலவர் அரியநாயகம் நெடுந்தீவு பிரதேச சபைக்கான புதிய கட்டடத் தொகுதியொன்றும் மகாநாட்டு மண்டபமும் திறந்து வைக்கும் வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது தெரிவித்தார்.

நெடுந்தீவில் இதுவரைக்கும் அபிவிருத்திதொண்டர்கள் 100 பேர், சுகாதாரத்தொண்டர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பாலர்பாடசாலை ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு அமைச்சர் நியமனம் பெற்றுக் கொடுத்துள்ளார். இவர்களுக்குரிய நிரந்தர நியமனம் வெகு விரைவில் படிப்படியாக வழங்கப்படும் என்று அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (உ)

# சனத்தொகை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய 18 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, சனத்தொகை ஒரு கோடியே 68 இலட்சத்து 59 ஆயிரத்து 796 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8)

# நாட்டில் 25 வீதமானோர் மனநோயாளிகளாம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மக்கள் தொகையில் 25% மானோர் மன நோயாளிகளாகவுள்ளனரென்று சுகாதார அமைச்சர் டபிள்யு. டி. ஜே. செனிவிரட்ண தகவல் வெளியிட்டுள்ளார்.

மொத்த சனத்தொகையில் 25% மானவர்கள் ஏதோ ஒருவகையில்மனநோய்த்தாக்கங்களுக்கு இலக்காகியுள்ளனர் என்றும், அவ்வாறானவர்களின் விபரங்கள் பற்றி தகவல் சேகரிப்பதற்கு நாடு பூராவும் குழுக்கள் நியமிக்கப்படும் என்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாகவைத்தியசாலைகள் நிறுவப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கண்டியில் புனர்வாழ்வு வைத்தியசாலை ஒன்றை திறந்துவைத்து உரையாற்றிய அமைச்சர், நோய்த்தடுப்புக்கான அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு 15 வீதத்திலிருந்து 30 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதுஎன்றும் தெரிவித்துள்ளார். (ந-8)

## உயிரியல் ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு எதிரான ஒப்பந்தத்தில்
# கைச்சாத்திட அமெரிக்கா மறுப்பு

(வாஷிங்டன்)

உயிரியல் ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்களை பயன்படுத்துவதற்கு எதிரான சர்வதேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமெரிக்கா மறுத்துள்ளது.

சுவிஸ்லாந்தின் ஜெனீவா தலைநகரில் உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு எதிரான சர்வதேச மாநாடொன்று அண்மையில் இடம்பெற்றது.

இம் மாநாட்டில் அமெரிக்காவின் சார்பில் கலந்து கொண்ட அமெரிக்கப் பிரதிநிதி ரொனால்ட் இந்த ஒப்பந்தம் தொடர்பாக தெரிவிக்கையில்;

இப்புதிய ஒப்பந்தமானது அமெரிக்காவின், பொருளாதார, மற்றும் வியாபார நிலையில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் இந்த ஒப்பந்தத்தை அமெரிக்கா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்று தெரிவித்தார்.

இதே வேளை, 1972 ஆம் ஆண்டு உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல் ஆயுதத்தடை ஒப்பந்தம் இவ்வருடத்துடன் முடிவடைகின்றது.

இதனால் இத்திட்டத்தைப் புதுப்பிக்கும் தேவை உள்ளது;

இவ் ஒப்பந்தம் அமுலில் இருக்கின்றபோதே ஈராக் போன்ற ஒருசில நாடுகள் நச்சுத்தன்மை வாய்ந்த ஆயுதங்களை தயாரிப்பது கண்டறியப்பட்டது.

இந் நிலையில் புதிய திட்டமொன்று உருவாக்கப் படாத பட்சத்தில் உலகில் உயிரியல் ஆயுத ஆபத்து அதிகரிக்கும் என சர்வதேச நாடுகள் தெரிவித்தன. (உ-7)

## பலியான பயணிகளுக்கு அஞ்சலி

(பரிஸ்)

கடந்த வருடம் பிரான்ஸில் ஏற்பட்ட விமான விபத்தில் பலியானவர்களிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 25 ஆம் திகதி ஏ எஸ் எஸ். பிரான்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில் 113 பேர் பலியானமை தெரிந்ததே.

இந்த அஞ்சலி நிகழ்வில் பலியானவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

(உ-7)

## விமானத் தளம் மீது வெற்றிகர அதிரடித் தாக்கு
# இராணுவ, தந்திரோபாய ரீதியில் புலிகளுக்கு கிடைத்த வெற்றி
## மேற்குலக பத்திரிகைகள் கருத்து

(லண்டன்)

கடந்த செவ்வாய்க்கிழமையன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலானது, இராணுவ ரீதியாகவும் தந்திரோபாய ரீதியாகவும் விடுதலைப் புலிகளுக்கு பெரும் வெற்றியை ஈட்டித் தந்துள்ளதென்றும் அத்தாக்குதல் இலங்கையில் ஏற்படுத்தவுள்ள பொருளாதார அரசியல் பிரச்சினைகள் குறித்தும் மேற்குலக ஆங்கிலத் தினசரிகள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி தினசரிகளில் புலிகளின் தாக்குதல் குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

### ரைம்ஸ் ஒவ் லண்டன்

கடந்த 18 வருடகாலமாக இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் இனப் போரில் இது ஒருபுதிய கட்டத்தின் தொடக்கமாக இருக்கிறது.

இக்காலப் பகுதியில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு விடுதலைப் புலிகள் விடுத்த மிக மோசமான தாக்குதல் இது என இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'ரைம்ஸ் ஒப் லண்டன்' தெரிவித்துள்ளது.

அண்மையில் நோர்வே அரசினால் இலங்கையில் தொடங்கப்பட்ட சமாதான முயற்சிகள் இதுவரை வெற்றி பெறாது இழுபறிப்பட்டுக் கொண்டிருப்பதனால் எழுந்த விரக்தியே இத்தாக்குதலுக்குக் காரணம் என்றும்,

இலங்கையில் நடைபெறும் போருக்கு முடிவேதும் ஏற்படும் போலத் தெரியவில்லை என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது;

உலக தரிசனம்

### ஹாடியன்

ஹாடியன் பத்திரிகை இத்தாக்குதல குறித்து தெரிவிக்கையில்; இலங்கையில் பாராளுமன்றம் இடை நிறுத்தப்பட்டுள்ளதையும் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிமுகப்படுத்த முயன்ற அதிகாரப் பரவலாக்கல உத்தேசத் திட்டத்திற்கு எழுந்துள்ள எதிர்ப்பு ஆகிய சூழ்நிலைகளையும் விடுதலைப் புலிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி உள்ளார்கள் எனவும், இத்தாக்குதல் தற்போது நிலவிவரும் போலியான அமைதி முடிவடைந்து விட்டது போருக்குத் தயாராகுங்கள் என்ற சோகமான செய்தியை வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது;

### இண்டிப் பெண்டன்

இத்தாக்குதல் இராணுவ ரீதியாகவும தந்திரோபாய ரீதியாகவும விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்தமாபெரும வெற்றி என்றும் ஏற்பட்ட சேதத்தின அடிப்படையில் நோக்கும போது இத்தாக்குதல பெரிய சாதனை என்று தான் கூறவேண்டும எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் மேற்படி தாக்குதல இலங்கைக்கு பெரும அளவு வருமானத்தை ஈட்டித் தரும உல்லாசப் பயணத்துறைக்கு கொடுக்கப் பட்ட பெரிய அடி என்று இண்டிபெண்டன் பத்திரிகை வர்ணித்துள்ளது.

மேற்படிப் பத்திரிகைகளில் இத்தாக்குதலில் அகப்பட்ட உல்லாசப் பயணிகளின் செய்திக்குறிப்புக்கள உட்படதாக்குதலின் பின்னணி மேற்படி தாக்குதலால் இலங்கையில் ஏற்படப் போகும விளைவுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன. (உ-9)

## வட கொரிய அதிபர் மொஸ்கோ பயணம்

(மொஸ்கோ)

வடகொரியாவின் ஜனாதிபதி கிங்கொங் நேற்றுமுன்தினம் காலை மொஸ்கோ பயணமாகியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்து பேசுவதற்காகவே இவர் ரஷ்யாவின் மொஸ்கோ நகருக்கு சென்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் ரஷ்யாவிற்கு வருமாறு வட கொரிய ஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக புட்டின் அழைத்திருந்தார்.

இந்த அழைப்பினை ஏற்று நேற்றுமுன்தினமே கிங்கொங் மொஸ்கோ பயணமானர் என தெரிவிக்கப்படுகிறது;

(உ-7)

## பூலான்தேவி
# கொலையை கண்டித்து கதவடைப்புக்கு அழைப்பு

(புதுடில்லி)

பூலான்தேவி கொலையை அடுத்து உத்தர பிரதேசத்தில் கதவடைப்புக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது

உத்திரபபிரதேச சமதா கட்சியினர் இந்தக்கதவடைப்புக்கான அழைப்பை விட்டிருக்கின்றனர்.

இதேவேளை பூலான்தேவி கொலை தொடர்பாக உத்தரப்பிரதேஷ் மத்திய ப்பிரதேஷ் புதுடில்லி ஆகிய பகுதிகளில முக்கிய தலைவர்களுக்கும் போதிய பாதுகாப்பும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூலான்தேவி கொலை தொடர்பாக பல கட்சிகள் கண்டனங்களைத் தெரிவித்தன. இதுகுறித்து பா ஜ க. இதனை அரசியலாக்க வேண்டாம் என்று கேட்டுளளது;

(து)

## இந்தியா செல்லும் பாக். பயணிகள் விரைவாக விசா பெற நடவடிக்கை

(புதுடில்லி)

பாகிஸ்தானிலிருந்து இந்தியா செல்லும பயணிகளுக்கு எல்லையிலும் எல்லைக கோட்டுப்பகுதிகளிலும் விஷா வழங்கும் காரியாலயங்களைத் திறந்து நடத்த இருப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷரப் இந்திய வருகையின் போது எடுத்துக் கொண்ட முடிவுகளின்படி அடுத்த 3 மாதங்களுக்கும் விஷா வழங்கும காரியாலயம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருமென்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கார்கில் போர்வீரர் தினத்தை யொட்டி வஜ்பாய் ஆற்றிய சொற்பொழிவுகளையடுத்தே இக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

விஷா அலுவலகங்களை அமைப்பதற்காக பஞ்சாப்பிலும் ராஜஸ்தானிலும் ஒவ்வோர் இடம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுளளது;

இவற்றைவிட ஸ்ரீநகர் எல்லை உட்பட பல இடங்களில் விஷா வழங்கும் அலுவலகங்கள் அமைக்கப்படவிருப்பதாகவும அந்த அதிகாரி தெரிவித்தார்; (து)

## இந்திய மீனவர்களை விடுவிக்க பாக். இணக்கம்

பாகிஸ்தான் சிறைகளிலுள்ள 31 இந்தியக் கைதிகளை விடுதலை செய்வதற்கான இணக்கப்பாடு எழுந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதிக்குள் அனுமதியின்றி அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்களே விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இம மாத நடுப்பகுதியில் இந்திய, பாகிஸ்தான் உயர் மட்டங்களிடையே ஆக்ராவில் இடம் பெற்ற பேச்சுக்களுக்கு வலுவூட்டும் வகையிலேயே இவ் விடுதலை அமையவுளளது, (உ-7)

## ஆக்ரா மாநாடு குறித்த விவாதம் 15 ஆம் திகதி
### வாஜ்பாய் பதிலளிப்பார்

(புதுடில்லி)

கடந்த 15 ஆம திகதி இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் அதிபர் முஷரப்பிற்கும் இடையே ஆக்ராவில் இடம் பெற்ற உச்ச நிலைப் பேச்சு சமபந்தமான விவாதங்களுக்கு இந்திய நாடாளுமன்றத்தில ஆகஸ்ட் முதலாம திகதி பதிலளிக்கவுளளதாகவும,

இதேவேளை, இவ் விவாதத்தின போது உச்சி மாநாடு சம்பந்தமான ஒரு சில விடயங்கள மறை முகமாககபபடும எனவும் பிரமதர் வாஜ்பாய் தெரிவித்துளளார்;

(உ-7)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ புகைப்பதை நிறுத்த...

அளவுக்கதிகமாக புகைககும நீங்கள் அப்பழக்கத்திலிருந்து மீள்வதற்கு ஆசைபபடுகிறீர்களா? ஆம என்றால் இதோ ஒரு வழி ..

புகை பிடிக்க வேண்டுமென்று உங்கள் மனதில் தோன்றும் போதெல்லாம் ஒரிரு ஏலக்காய்களை வாயில் போட்டுக் கொள்ளுவகள இபபடி தொடர்ந்து செய்தால் புகை பிடிக்கும் ஆசை படிப்படியாககுறைந்து விடும் அத்துடன் ஏலக்காய் ஜீரணத்திற்கு உதவும, பசியைத் தூண்டும், மயக்கம, கறுகிறுப்பபை தூண்டும்.

## ஆக்ரா பேச்சுவார்த்தை
# பிடிவாதக் காரர்களால நினைத்தபடி அமையவில்லை
## முஷரப் ஆதங்கம்

(இஸ்லாமபாத)

இந்தியப் பாகிஸ்தான் உச்ச நிலைப் பேச்சுகள் சில பிடிவாதக் காரர்களினாலேயே வெற்றியளிக்கவிலலை என்று பாகிஸ்தான் அதிபர் பெர்வேஸ் முஷரப் தெரிவித்துளளார்.

இஸ்லாமபாத்தில் அண்மையில் இடம்பெற்ற பாகிஸ்தானின் அமைச்சரவை, மற்றும் பாதுகாப்புத்தளம் ஆகியவற்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துளளார்.

ஜனாதிபதி முஷரப் மேலும தெரிவிக்கையில் இந்திய பிரதமர் வஜ்பாய் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங இருவரினதும் அணுகுமுறை சாதகமாக அமைந்தாலும் இந்தியாவின் சில அரசியல் பிடிவாதக் காரர்களினால் தான் நினைத்தளவிற்கு வெற்றியளிக்கவில்லை.

ஆனாலும், ஆக்ரா பேச்சுவார்த்தை வெற்றி அளிக்காமல் போனாலும காஸ்மீர் பேச்சுவார்த்தை தொடரும் என்று உறுதி படக்கூறியுள்ளார்; (உ-7)

மனநிலத்தின் ஆகும் மறுமை மற்றஃதும் இனநலத்தின் ஏமாட(பு) உடைத்து

குறள்

# வலம்புரி

## யுத்தநிறுத்தம் உடன் செய்க

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மதிநுட்பத் தாக்குதலுக்கு விமானப் படையினரின் ஒத்துழைப்பே காரணமென அரச உயர் மட்டத்தில் சந்தேகம் எழுந்துள்ளது விடுதலைப்புலிகளுக்கெதிரான யுத்தம் தொடரும் என ஜனாதிபதி மீண்டும் மீண்டும் அறிவித்து வரும் வேளையில் அந்த யுத்தத்தையே முன்னெடுத்துச் செல்லவிருக்கும்படையினர் மீது சந்தேகம் எழுமாயின் எவ்வாறு யுத்தம் நடத்த முடியும் என்பதை அரசு இப்போதாவது உணருமா என்பது கேள்விக்குறியே.

ஆட்டைக்கடித்து, மாட்டைக் கடித்து இப்போது மனிதனைக் கடிப்பது போல் அரசின் நிலை போய்விட்டது.

முன்பெல்லாம் கொழும்பில் குண்டு வெடித்தால் இடம், ஏவல் பாராது விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழ்இளைஞர், யுவதிகள் கைது செய்யப்படுவர். பின்னர் காலப்போக்கில், சில சிங்கள மக்களும் கைதாகினர். இப்போது படையினர் கைதாகின்றனர். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தாக்குத நடந்தேறிய பின்னரே விமானப்படையினர் சிலா கைது செய்யப்பட்டுள்ளனரெனில், ஸ்ரீலங்காவின் முப்படையினரும் எங்கெங்கெல்லாம் கடமையில் உள்ளனரோ அங்கங்கெல்லாம் இருக்கும் படையினரில் எத்தனை பேர் புலிகளுடன் தொடர்புடையவர்களென்பதை தாக்குதல்நடத்திய பின்பே அரசு தீர்மானிக்க முடியும். தனது படையினர் மீதே அரசு நம்பிக்கை இழந்துள்ள போது, அப்படையின் தாக்குதல் நடவடிக்கையில் மட்டும் நம்பிக்கை கொள்வதென்பது, ஓர் மரத்தின் கிளையிலிருந்து கொண்டு அக கிளையின் அடிப்பாகத்தை வெட்டும் அறிவுக்கு ஒப்பானதாகும்.

எனவே, இலங்கைஅரசு இனிமேலாவதுதன் நிலை. படைநிலை, மக்கள் நிலை அறிந்துபுலிகளுடன் பேசுவதற்கு முன்னோடியாக ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்க வேண்டும். அவ்வாறு அரசு ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்குமாயின் புலிகளுடனான பேச்சுக்கு சந்தர்ப்பத்தை உண்டுபண்ணுவதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் முடியும்.

# யுத்த விமானங்களின் ஒட்டுமொத்த அழிவு

# அரசின் படைபலத்தில் விழுந்த பெரும் 'இடி'

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கட்டுநாயக்கவிமானப்படைத் தளத்தின் மீதும் சர்வதேச விமான நிலையத்தின் மீதும விடுதலைப்புலிகள மேற்கொண்ட மதிநுட்ப அதிரடித்தாக்குதலில் அழிந்து போன வான்கலங்களுள பெரும்பாலானவை இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான தாக்குதல் வானூர்திகளாகும்.

### தாக்குதல் விமானங்கள்

ஒரே நாளில் அதிகமான தாக்குதல் விமானங்களை இழந்து நிற்கும் விமானப்படையின் தாக்குதல் வலு எந்த அளவுக்கு பாதிக்கபபட்டிருக்கிறது என்பது பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள பலதரப்பினராலும முன் வைக்கப்படுகின்றன. இத்தாக்குதல் விமானப் படையின்போர்நடவடிக்கைகளை கணிசமாகப் பாதிக்கும் என்றும், இதனை இனி வரும் காலங்களில் போர் முனை ளில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் சிலர் கூறுகின்றனர்.

ஆனால் இது விமானப் படைக்குமிகப்பெரிய தாக்கத்தை உண்டுடண்ணும் என தான் நினைக்கவில்லை என்று இராணுவ ஆய்வாளர் சிவராம (தராகி) கூறியிருக்கிறார்.

### மனோவலிமை பாதிக்கும்

எது எப்படி இருப்பினும் அண்மைக் காலங்களில் போர் முனைகளில் பெரும் பங்கு வகித்ததுடன், சண்டையிடும் படைகளுக்கு ஒரு வான் பாதுகாப்புக் கவசத்தை உருவாக்கி வைத்திருந்த விமானப் படையின் பலம சிதைந்திருப்பது யுத்தத்தில் ஈடுபடும்படையினரின் மனோநிலையை பெரிதும் பாதிக்கும் என்பது உண்மை.

அழித்தொழிக்கப் பட்டயுத்த வனூர்திளின் தன்மைகள்

**பிரசன்னா**

பற்றி ஆராய்ந்தால் இப்பேரழிவால் விமானப்படைக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடியும்.

### மிக் 27 ரக தாக்குதல் ஜெட் விமானம்

ரஷ்பத் தயாரிப்புகளான இந்த வகை விமானங்களை உக்ரேனிடம் இருந்து கடந்த ஆண்டு விமானபபடை கொள்வனவு செய்திருந்தது உலகில் இன்றுள்ள முக்கியமானதாக்குதல விமானங்களுள் குறிப்பிடத்தக்கவையாககருதப்படும இவ்விமானங்கள் இலங்கையிடம உள்ள அதியுச்ச உயர் வலு தாக்குதல் விமானங்களாக விளங்குகின்றன.

ஒரு தனிநபர்இருக்கையைக் கொண்ட இவ்விமானம் ஒலியின் 2.05 மடங்கு வேகத்தில் சென்று தாக்குதல்களை நிகழ்த்தக்கூடியது.

23 எம் எம். பீரங்கி ஏவுகணை செலுத்திவசதியையும் வேவு பார்க்கும் படப்பிடிப்பு வசதியையும் கொண்டது. இவ்வகைவிமானத்தில் ஒன்றே முற்றாகதாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

### கிபிர் குண்டு வீச்சு ஜெட் விமானங்கள்

1995 இலும் பின்னர் 1997 இலும் இவ்வகை விமானங்கள் இஸ்ரேலிடம் இருந்து இலங்கை விமானப்படையால் கொள்வனவு செய்யப்பட்டன. தனியொருவர் விமானியாகவுள்ள இவ்விமானம் தரைத் தாக்கு ஏவுகணைகள், பீரங்கிகள் பொருத்தும் வசதி கொண்டது. ஒலியின் வேகத்தின் 2.3 மடங்கு வேகத்தில் சென்று தாக்குதல்களை நிகழ்த்தவல்லது மிக் விமானங்களுக்கு அடுத்தபடியான தாக்குதல் வலு கொண்டது. இவ்வகை விமானங்கள் இரண்டை புலிகள்தகர்த்துள்ளனர்.

### எம் ஐ. 17 ரக ஹெலிகள்

போர் முனை போக்குவரத்து வானூர்திகளான இவை ரஷ்யதயாரிப்பாகும். 1993 இல் கொள்வனவு செய்யப்பட்ட. இக் ஹெலிகள் போர் முனை நடவடிக்கைகளுக்கும் துருப்புக்களை காவுவதற்கும் இராணுவ ஊர்திகளை காவுவதற்கும், சில சமயம் தாக்குதல் நடவடிக்கைகளுக்கும் இலங்கை விமானப்படைக்கு ஆதார அடித்தளமாக இருக்கின்றன. இவ்வகை ஹெலிகள் இரண்டு தாக்கியழிக்கப்பட்டுள்ளன.

### கே- 8ரக பயிற்சி விமானங்கள்

சீன- பாகிஸ்தான் கூட்டுத் தயாரிப்பான இவ்வகை விமானங்கள் அண்மையிலேயே சீனாவிடம் இருந்து 4 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கொள்வனவுசெய்யப்பட்டன இவை விமானப்படையினால் பயிற்சிக்குபயன்படுத்துப்படும்விமானங்கள் இவற்றில் 3 முற்று முழுதாகத்தாக்கியழிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளால்திட்டமிட்டு திறமையாக மேற்கொள்ளப்பட்ட இப்பாரிய தாக்குதல் நடவடிக்கை உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. மேற்கு நாட்டு செய்தி ஊடகங்களும் பத்திரிகைகளும் மிக முக்கியத்துவம் கொடுத்து இது பற்றிய செய்திளை வெளியிட்டன. எனினும் இத்தாக்குதல் நடவடிக்கைவிமானப்படையின் பலத்தில் எந்தளவுபாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை தொடரப் போகும் யுத்தகளங்களில்காணக்கூடியதாக இருக்கும்.

### ஜனாதிபதியின் முடிவு

# ஜனநாயக சூழ்நிலைகள் மேலோங்க வழிவகுக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பயனபடுத்தி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தமையும், கருத்துக்கணிப்பை நடத்த முன்வந்தமையும், சர்வாதிகார அரசியற்சட்டத்தை ஒழித்து ஜனநாயகத்திறகும, சமாதானத்துககுமான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதறகு வழி வகுககும செயலகளாகும்.

இவ்வாறு. மேல்மாகாண சபை அமைச்சர் மகேஷ் அல்மெய்டா, நவலங்கா சமசமாஜக்கட்சித்தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன, சமசமாஜக்கட்சியின் தேசிய அமைப்பாளர் ஆனந்த திஸ்ஸ பெரேரா, ஸ்ரீலங்கா மக்கள கட்சி இளைஞர் அமைப்பாளர் ரேணுகா பெரேரா, ஆகியோர் கூட்டறிக்கையொன்றின் மூலம தெரிவித்துள்ளனர்.

சிறுபான்மை மக்களின் உரிமைபபோராட்டங்களை நசுக்கவும. தொழிலாள வர்க்கத்தின போராட்டங்களை ஒடுக்கவும் வாய்ப்பளிக்ககூடிய தேசிய அரசாங்கம ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கத்திற்குளளேயும, வெளியேயுமுள்ள சந்தர்ப்பவாத, ஒடுக்குமுறை சகதிகள ஒன்றுசேர்ந்ததாலேயே, இன்றைய அரசியல நெருககடிதோன்றியது. இந்நிலையில், சமாதானய, சுதந்திரம, ஜனநாயகம் என்பவற்றை காககவல்ல புதிய அரசியற்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு கருததுக கணிபபில் 'ஆம்' என்று மக்கள வாக்களிததல் வேண்டும் என்று அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## தினசரி தியானம்

## ஆளுதலும் ஆட்படுதலும்

வேந்தே, நான் மனதை அடக்கியாளவும், உனக்கு ஆட்படவும் கறறுக் கொளவேனாக.

பரமார்த்திக பேருண்மையை அறியாத பாமரர்கள் எண்ணததுக்கு அடிமையாகிறார்கள. ஞானியோ எண்ணத்துக்கு இறைவன். அப்போதைககபபோது கிடைககும இன்பததை விரும்பி ஆடு. மாடு போன்று பாமரர் சிற்றியல்புக்கு ஆடபடுகின்றன. மருந்துககுரிய செடியை மருததுவன் தேடியெடுபபது போன்று நலம் தருமசீரிய எண்ணத்தை ஞானி மனத்தின் கண் காட்டுகிறான். வாழ்ககை என்னுய ராஜ்யத்தைஞானி ஆளுகின்றான். மறறவர் வாழ்ககைககு ஆட்படுகின்றனர்.

வானூடு அடங்கும் வளி போல இன்புருவாங் கோனூடு அடங்கும குறிப்பறிவ தென்நாளோ?

தாயுமானவர்

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# 14 ஆம் திகதிவரை விளக்க மறியல் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைது செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் நீதிமன்றிற்கு பெரும் பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இவ்வேளையில் பெரும் எண்ணிக்கையான பல்கலைக்கழக மாணவர்கள் சமுகம் அளித்திருந்தனர்.

ஆஜர்படுத்திய வேளை நீதிவானின் கட்டளைக்கு அமைவாக வைத்திய கலாநிதி சி. இராஜேஸ்வரனினால் கடந்த 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திவ்வியனின் உடல் நிலை பற்றிய மருத்துவ அறிக்கை நீதிவான் முன் வாசிக்கப்பட்டதுடன் திவ்வியனால் வைத்தியரிடம் கொடுக்கப்பட்ட இரத்தம் தோய்ந்த கைக்குட்டையும் பரிசோதிக்கப்பட்ட பின் நீதிவானிடம் கொடுக்கப்பட்டது.

திவ்வியனை சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (உ-6)

# ஜனாதிபதியின் சுயநலமே சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தான் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்பதாலும், பிரதமராக வருவதற்காகவுமே தற்போதைய அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று முன் தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டுவருவதையும், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதையும் ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக எதிர்க்கும் என்றும், இதன் மூலம் அரசாங்கத்தை தோற்கடிப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

(வ)

# கைதடி மக்களுக்கு 2ம்கட்ட கொடுப்பனவு விரைவில்

தென்மராட்சி, கைதடிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு ஊக்குவிப்பு இரண்டாங்கட்ட கொடுப்பனவாக 7 ஆயிரம் ரூபாவை உடனடியாக வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

கைதடிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள சுமார் 410 குடும்பங்களுக்கு அமைச்சரின் நடவடிக்கையையடுத்து முதலாம் கட்ட கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-52)

# வடக்குக் கிழக்குக்கு வெளியே புலிகளின் தாக்குதல் தீவிரமடையும்!

## இராணுவ ஆய்வாளர்கள் அச்சம்

(கொழும்பு,

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய, விமானப் படைத் தளம் மீதான பாரிய தாக்குதல் நடவடிக்கை விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கிற்கு வெளியே பெரும் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள் என்பதையே கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளதென இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாந்திகதி, வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரனை நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சோல் ஹெய்ம் சந்தித்திருந்தார். அச்சந்திப்பையடுத்து விடுதலைப் புலிகள் கடந்த எட்டுமாத காலமாக வடக்குக் கிழக்கிற்கு வெளியே எந்தவொரு தாக்குதலையும் நடத்தவில்லை.

அத்துடன் கடந்த வருடம் டிசம்பர் 24ந் திகதி முதல் கடந்த ஏப்ரல் 24ந் திகதி வரை புலிகள் ஒருதலைப் பட்சமாக யுத்தநிறுத்தம் மேற்கொண்டிருந்தனர் இவ் யுத்தநிறுத்தக் காலத்திலும் அதனையடுத்து நகர்ந்த இரண்டு மாத காலத்திலும் விடுதலைப்புலிகள் வடக்குக் கிழக்கிற்கு வெளியே தாக்குதல் எதனையும் நடத்தவில்லை.

ஆனால் தற்பொழுது கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இது இனி வரும் காலங்களில் வடக்குக் கிழக்கிற்கு வெளியே புலிகளின் தாக்குதல் உக்கிரமடையும் என்பதை உணர்த்துவதாக ஆய்வாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அண்மையில் வடக்குக் கிழக்கில் படையினர் 48 மணி நேரம் விமானத் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதனைக் கண்டித்து விடுதலைப் புலிகள் எச்சரித்திருந்தனர். இதன் எதிரொலியே விமானப்படைத்தளத் தாக்குதலாகவும் இருக்கலாம் என ஆய்வாளர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர். (இ)

### சர்வஜன . . .

ஓகஸ்ட் 21ந் திகதி நடத்தப்படவுள்ள சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பை எதிர்த்து, ஜே வி பி ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் பிரசாரக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில் இராமிய மட்டத்தில் இருபதாயிரம் பிரசாரக் கூட்டங்கள் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், இருபது ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் நடத்தவுள்ளதாகவும் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ)

### மணலாறு

பலத்தஇழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஆயுதங்கள்மற்றும் யுத்த தளபாடங்களையும் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கட்டுநாயக்கா விமானப்படைத்தளத் தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகளால்மேற்கொண்ட அடுத்ததாக்குதல் இது வென்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ)

### பிரதிநிதித். . .

வடடம் கூறியுள்ளோம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் நேற்று நடத்திய செய்தியாளர் மகாநாட்டின் போது மேற்கண்டவாறு கூறினார்

ஜனாதிபதி சந்திரிக்காவுடன நேற்று பேச்சுவார்த்தை நடத்திய பின் இச்செய்தியாளர் மகாநாட்டை ஆறுமுகம் தொண்டமான் நடத்தியிருந்தார்.

இம்மகாநாட்டில் அமைச்சர் மேலும தெரிவித்திருப்பதாவது;

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது பாராளுமன்றத்தில் எமது பிரதிநிதித்துவம தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளோம். இதனை அவர் பரிசீலித்து எதிர்வரும் திங்கட்கிழமை பதில்தருவார் எனக் கூறிய அமைச்சர் தொண்டமான் சர்வஜனவாக்குரிமையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்க்கும் என்ற தவறான பத்திரிகைச் செய்தியை தாம் மறுத்துள்ளார். (வ)

## முத்தரப்புகிரிக்கெற்போட்டி இலங்கையை எதிர்த்தாட கங்குலிக்குத் தடை

கொக்காகோலா வெற்றிக் கிண்ண முத்தரப்பு கிரிக்கெற்போட்டிகளில் இன்று கொழும்பில்நடைபெறவுள்ள இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான முக்கியமான போட்டியில் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி விளையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அணிக்கும் இந்திய அணிக்குமிடையில் நேற்றுமுன்தினம இடம்பெற்ற ஆட்டத்தின்போது எல். பி. டபிள்யூ முறையில கங்குலி ஆட்டமிழந்ததாக நடுவர் காமினி சில்வா தீர்ப்பளித்தார். ஆனால் நடுவருக்கு துடுப்பைக்காட்டி நடுவரின் தீர்ப்புக்கு கங்குலி எதிர்ப்புத் தெரிவித்தார் இச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட நடுவர் குழு இன்றைய போட்டியில் கங்குலி விளையாடுவதற்குத் தடைவிதித்துள்ளது. (ந-8)

### ஒருவர் உயிரிழப்பு

மணலாறு சிலோன தியேட்டர் பகுதியில படையினருடனான மோதல் சம்பவம் ஒன்றில் மேஜர் ஜனார்த்தனன் (ஐயாத்துரை திருச்செல்வம், மட்டக்களப்பு) என்ற போராளி உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள அறிவித்துள்ளனர். (ந-4)

### யுத்தத்திற்கு . . .

தனர்,

இக் கூட்டத்தில் மாவை சேனாதிராசா எம்.பி மேலும் பேசுகையில்;

இலங்கையில் தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன ஜனாதிபதி சந்திரிகா பேசுவதில, தமிழ்க் கட்சிகளிடம் எந்தவிதமான கருத்து முரண்பாடுகளும் கிடையாது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசித்தீர்க்கும் முடிவு தான் இலங்கைக்கு நல்லதாக அமையும.

ஆயுதம்தாங்கிய அனைத்து போராளிகுழுக்களும தமக்கிடையிலான சகோதரப்படுகொலைகளை நிறுத்த வேண்டும நாம் அனைவரும ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம தான் எமது சக்தியை அரசுக்கும் சர்வ தேசத்திற்கும் எடுத்துக்காட்ட முடியும் என்றார்.

ரெலோ முதல்வர் என் சிறிகாந்தா பேசும போது தமிழர் மீதானபிரச்சினைகளைத் தீர்ப்பதில் எந்த விதமான நடவடிக்கைகளையும இந்தஅரசு எடுக்கவில்லை என்று குற்றச் சாட்டினர்.

இக் கூட்டத்தில் புளொட் அமைப்பின் சாபில்திருப்பதி மாஸ்டர் ஈ பி ஆர். எல் எவ் இன சார்பில சுரேஸ பிறேமச்சந்திரன் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் எஸ் செந்திநாதன், முன்னாள் யாழ்மா நகர பிரதி மேயர் அலோசியஸ், வன்னி மாவட்டரெலோ எம்பிர ஜா குகனேஸ்வரன ஆகியோரும உரையாற்றினர் இக் கூட்டத்தில்பலலாயிரக்கணக்கானமக்கள கலந்து கொண்டனர். (வ)

### புலிகள். . .

னா இரகசிய ஒத்துழைப்பு வழங்கியமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளதென வும், பொதுமக்களகொடுத்த தகவலகளை விமானப்படையினர் கவனத்தில எடுத்துநடவடிக்கைஎடுத்திருப்பார்களானால விமானப்படைக்கு இத்தகையபாரிய அழிவு ஏற்பட்டிருக்கமாட்டாது என விமானப் படைத்தளபதி எயர் வைஸ் மார்ஷல ஜயலத வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம தொடர்பாக பலவேறு கட்டங்களாக விசாரணைகள மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

இதேவேளை விமானப் படைத்தளபதியின் தலைமையில் எயர் வைஸ் மார்ஷல் வ்ஜித தென்னககோன் கப்டன சர்கிரி சானந்தசில்வா, பிரகாஸ் தென்னக்கோன், விங்கொமாண்டர் கசன்புலத்சிங்கா ஆகியோர் அடங்கிய உயாமட்ட விசாரணைககுழுவும நியமிக்கப் பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### மாணிக்கம்-சுந்தரலிங்கம்

(சின்னக்கிளி)

ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மா. சுந்தரலிங்கம பிரான்சில (25-07-2001) புதன் கிழமை காலமாகிவிட்டார். அன்னார காலஞ்சென்ற பரமு மாணிக்கம, நாகம்மா ஆகியோரின அன்பு மகனும நீற்றாவின் அன்புக்கணவரும காலஞ்சென்றபூவலிங்கம கனகரத்தினம [சமாதான நீதவான்], செல்வராசா, மகாலட்சுமி நவமணி, கலா சுந்தரம (எ. சி டி சி) குமரேசன் (பொறின ஸ்ருடியோ) பாலச்சந்திரன சண்முகராசா (ராசன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும, சாமி (அம்பாள மினி-ஸ் உரிமையாளர்) காலஞ் சென்ற தாமோதரன (தரன் ஸ்ருடியோ) றோசம்மா, வசுகிஸ்னேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜினி தேவி, நாகேஸ்வரி, பரமேஸ்வரி, ஆகியோரின அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின ஈமக் கிரிகைகள் 28-07-2001 சனிக் கிழமை இன்று பிரான்சில் நடைபெறும.

அன்றைய தினம அவர் பிறந்த ஆலயத்திலும் அன்னாரின் நினைவாகஆத்மசாந்திப பிரார்த்தனை நிகழ்வு நடைபெறும இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும ஏற்றுக்கொள்ளவும.

82/17 பருத்தித்துறை வீதி,
3ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம.

தகவல் -
மா. குமரேசன்
(சகோதரன்)
(பொறின ஸ்ருடியோ)

(3405)



**நாகம்ஸ்**
(சுன்னாகம்)

அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
இன்று மட்டும்
சரத்குமார், மீனா நடித்த

**மாயி**

[ரீல்ஸ்]
(காட்சிகள்)
தினசரி 11-00, 2-30
(பு-நே)
நாளை முதல்

**சிட்டிசன்**

(3408)



## பிற்போடப்பட்டுள்ளது

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அறங்காவல சபையினரால் நாளை 29. 07. 2001 ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவிருந்த மகா கும்பாபிஷேக மலர் தவிர்க்க முடியாத காரணத்தால பிற்போடப்பட்டுள்ளது வெளியிடப் படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில்
அறங்காவல சபை
[கு 2328]

துன்னாலை வடக்கு,
புலோலி,



உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

# நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்,

[கி/2195]

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.